**கோமரங்கடவல பிரதேச சபை**
**திருகோணமலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2015 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஜூலை 12 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 04 மாத தாமதித்து 2015 திசெம்பர் 03 திகதியும் கணக்காய்வாளர் தலைமை சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2015 ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 நவம்பர் 22 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து கோமரங்கடவல பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பொது நிருவாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சனநாயக நிருவாகம் பற்றி அமைச்சில் 2015 ஜூலை 27 திகதி கடிதத்தின் பிரகாரம் 2015 ஆண்டின் போது சபைக்கு கிடைத்திருந்த மோட்டார் கிரேட்டர் வண்டி, டம்படிரக் வண்டி, க்ரூ கப் வண்டி என்பவற்றின் மொத்தப் பெறுமதி ரூபா 34,170,550 தொகை எனினும் அந்த வாகனங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் ரூபா 7,300,000 என காட்டப்பட்டிருந்தமையால் மோட்டார் வாகனங்களின் பெறுமதி ரூபா 26,870,550 தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) 2015 ஆம் ஆண்டிற்கான நிலுவை வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 27,350 தொகையினை கணக்குகளுக்கு எடுத்திருக்கவில்லை.

(இ) 2015 ஆண்டின் போது கிடைத்திருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,363,867 தொகை ஆண்டிற்கான வருமானமாகக் கணித்திருக்கவில்லை.

#### 1.3.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை

வைப்புச் செய்து 2 வருடங்களை கடந்துள்ள ரூபா 16,400 தொகையான வைப்புக்கள் தொடர்பாக இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 957,810 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,613,663 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 2,571,473 இற்கான பிரதிகூலமான முரண்கள் அவதானிக்கப்பட்டன.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பீட்டு வருமானம் | உள்ளவாறான வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| குத்தகை | 1,079 | 764 | 189 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 61 | 67 | 27 |
| ஏனைய வருமானங்கள் | 2,708 | 3,083 | 1,641 |

#### 2.2.2 முத்திரைக் கட்டணம்

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பிரதான செயலாளரிடம் பெற வேண்டிய முத்திரைக் கட்டணத்தை கணித்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம்

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணத்தை இனங்காண்பதற்கு மற்றும் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

2015 ஜூன் 14 ஆந் திகதிய பொதுநிதி சுற்றறிக்கை இலக்கம் 04/2015 இன் பிரகாரம் மோட்டார் வாகனங்களுக்காக காப்புறுதிப் பாதுகாப்பு பெறும் போது அரச நிறுவனங்களில் இருந்து நேரடியாகவே பெற்றுக்கொள்ள வேண்டும். எனினும் சபையினால் காப்புறுதி முகவர் ஒருவரின் மூலம் 04 வாகனங்களுக்காக காப்புறுதி பாதுகாப்பு பெறப்பட்டிருந்தது.

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பத்தினால் கிராம மக்களை வலுப்படுத்தும் குறிக்கோளுடன் இலங்கை தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப முகவர் நிலையத்தின் மூலம் செயற்படுத்தப்படும் "ஈ நெனஸல" செயற்திட்டம் கோமரங்கடவல பொது நூலகத்தில் 2014 நவம்பர் மாதம் 18 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு கணனிகள், அச்சு இயந்திரங்கள், ஸ்கேனர், வெப் புகைப்படக் கருவிகள் ஆகிய உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அதன் மூலம் எதிர்பார்த்த நலன்கள் பொதுமக்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு 2016 ஆகஸ்ட் 31 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.3 ஒப்பந்த நிருவாகம்

#### 3.3.1 கோமரங்கடவல குடிநீர் செயற்திட்டம்

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் குடிப்பதற்கு உகந்த குடிநீர் காணப்படாத சிக்கலுக்கு தீர்ப்பு ஒன்றாக புரநெகும செயற்திட்டத்தின் கீழ் குடிநீர் செயற்திட்டமொன்று மூன்று கட்டங்களில் செயற்படுத்துவதற்கு சபையினால் ரூபா 51,571,930 தொகை பெறுமதியுடைய மூன்று உடன்படிக்கைகள் 2013 ஆகஸ்ட் திசெம்பர் மற்றும் 2014 மே மாதங்களில் கையொப்பமிடப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பொறியியல் விவரக் குறிப்புக்களின் பிரகாரம் ஒரு நிமிடத்தில் 300 லீட்டர் கொள்திறன் உடைய தண்ணீர் மோட்டர் ஒன்று பொறுத்துவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும், ஒப்பந்தக்காரர் பொருத்தியிருந்தது ஒரு நிமிடத்தில் நீர் 100 லீட்டர் கொள்திறன் கொண்ட மோட்டார் ஒன்றென 2016 ஆகஸ்ட் 25 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(ஆ) 300 லீட்டர் கொள்திறன் கொண்ட மோட்டார் ஒன்றிற்காக ரூபா 175,000 செலுத்த வேண்டியிருந்த போதிலும் வேலை விடய இலக்கம் 5.1 இன் பிரகாரம் ஒரு நிமிடத்தில் 100 லீட்டர் கொள்திறன் கொண்ட மோட்டார் ஒன்றிற்காக ரூபா 200,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் குறைந்த கொள்திறனை கொண்ட மோட்டார் ஒன்றிற்காக கூடுதலான தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

(இ) மேற்கூறிய விதமாக 100 லீட்டர் கொள்திறன் உள்ள மோட்டார் ஒன்று பொருத்தப்பட்டிருந்தமையால் நீர் தொட்டியை நிரப்புவதற்காக மேலதிக நேரமொன்று செலவிடப்பட்டிருந்தமையால் மேலதிகமாக மின்சாரத்தை ஈடுபடுத்த வேண்டி நேரிட்டுள்ளது.

(ஈ) இந்த செயற்திட்டத்தின் குறிக்கோள் கோமரங்கடவல பிரதேச செயலக வட்டாரத்தை சேர்ந்த கோமரங்கடவல மற்றும் கந்தமாலாவ கிராமசேவையாளர் பிரிவுகளில் வதியும் 685 குடும்பங்களுக்கு சுகாதார பாதுகாப்புள்ள குடிநீர் வழங்குதலாகும். எனினும் நிர்மாணிக்கப்பட்டிருந்த கிணற்று நீர் கபில நிறமாக காணப்பட்டமையால் அந்த நீர் குடிப்பதற்காக தகுதியற்ற நிலைமையில் காணப்பட்டது.

(உ) கிணற்றில் நீர் போதியளவினதாக காணப்படாமை மற்றும் சுகாதார பாதுகாப்பு காணப்படாமை காரணங்களினால் தேசிய நீர்வழங்கள் மற்றும் வடிகால் அமைப்பு சபையின் ஆலோசனையின் பிரகாரம் இந்த நீர்ச் செயற்திட்டத்தின் IV ஆம் கட்டம் என குழாய் கிணறு ஒன்று நிர்மாணிப்பதற்காக 2016 ஜனவரி 27 ஆந் திகதி ரூபா 6,986,000 தொகை பெறுமதியான ஒப்பந்த வேலை ஒன்று வழங்கப்பட்டிருந்தது.

(ஊ) இச் செயற்திட்டத்தின் மேற்பார்வை மற்றும் ஆலோசனை விடயங்கள் மேற்கொள்வதற்காக தேசிய நீர்வழங்கள் மற்றும் வடிகாலமைப்புச் சபையுடன் 2013 மே 13 திகதி உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டிருந்துடன், இதற்காக ரூபா 2,623,000 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. எனினும் உரிய முறையில் சாத்தியக்கூறு ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்படாமல் கிணற்றை நிர்மாணித்ததால் அந்த கிணறு அமைந்துள்ள இடத்தில் இருந்து 1½ கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள இடம் ஒன்றில் தொட்டி கட்டப்பட்டமை காரணமாக எதிர்ப்பார்த்த குடும்பங்களுக்கு உரிய முறையில் நீர் வழங்குவதற்கு முடியாதிருந்தது.

(எ) ரூபா 28,943,737 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டு 475 குடும்பங்களுக்கு குழாய் பரப்பப்பட்டு இருந்த போதிலும் திருப்பனே, மடுகஹவெல, கரக்கஹவெவ மற்றும் ரிதீபுர ஆகிய கிராமங்களில் குடியிருக்கும் 150 குடும்பங்களுக்கு நீர் வழங்கள் ஆரம்பிக்கப்பட்ட 2014 ஆண்டு முதல் நீர் வழங்குவதற்கு முடியாதிருந்தது.

### 3.3.2 பிரதேச சபை கட்டிடம் நிர்மாணித்தல்

புரநெகும செயற்திட்டத்தின் கீழ் பிரதேச சபை அலுவலகத்திற்கான இரண்டு மாடிக் கட்டிடம் ஒன்று நிர்மாணிப்பதற்காக ரூபா 31,600,000 பெறுமதிக்கு 06 மாத காலத்தில் நிர்மாண வேலை பூர்த்தி செய்ய வேண்டிய அடிப்படையில் 2012 திசெம்பர் 13 திகதி ஒப்பந்த உடன்படிக்கைகள் கையொப்பமிடப்பட்டிருந்ததுடன் 2014 ஆகஸ்ட் 18 ஆம் திகதி கட்டிடம் சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக 2016 ஆகஸ்ட 25 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட இடப்பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கட்டிடத்தில் மேல் மாடியில் அமைந்துள்ள கூட்ட மண்டபம், சுவடிக்கூடம் பொதுமக்கள் கலலி ஆகிய இடங்களில் மழைநீர் சிவிலினில் உள்ளிருந்து வடிந்து ஓடுவதனால் அம் மண்டபம் மற்றும் சுவடிக் கூடத்தில் காணப்பட்ட நிழற்பிரதி இயந்திரம் மற்றும் கணனி என்பன நீரினால் நனைந்திருந்தமையால் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டது. கட்டிடத்தின் கூரையின் அமைப்பு முறை பொறியியல் வடிவமைப்பு திட்டத்தில் காணப்பட்ட குறைபாடு காரணமாக கூரைக்காக செலுத்தியிருந்த ரூபா 2,113,650 தொகை விளைவற்ற செலவு ஒன்றாக மாறியுள்ளது.

(ஆ) 2005 இன் 03 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் III ஆம் பகுதியின் பிரகாரம் (2007 இன் 13 ஆம் இலக்கம் மற்றும் 2009 இன் 18 ஆம் இலக்கம் கொண்ட நிதி திருத்திய சட்டங்களினால் திருத்தப்பட்ட) ஒப்பந்தக்காரருக்கு செலுத்தியிருந்த ரூபா 36,851,944 இற்கான கைத்தொழில் சான்றிதழ் நிதி வரி (CIGFL) ஆகிய ரூபா 92,130 தொகை தடுத்து வைத்து உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.3.3 கோமரங்கடவல வாராந்த சந்தை கடைகள் நிர்மாணித்தல்

சபையினால் புரநெகும செயற்திட்டத்தின் கீழ் கோமரங்கடவல வாராந்த சந்தை 03 கடைகள் நிர்மாணிப்பதற்காக ரூபா 4,201,675 இற்கான (பெறுமதி கூட்டிய வரி இன்றி) பொறுமதிக்கு 2011 அக்தோபர் 17 ஆந் திகதி ஒப்பந்தக்காருடன் உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக 2016 ஆகஸ்ட் 03 திகதி மேற்கொள்ளப்பட்ட இடப்பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இந்த கட்டிட நிர்மாண வேலைக்காக ரூபா 4,577,733 தொகையொன்று செலுத்தியிருந்ததுடன் நிர்மாணவேலை பூர்த்தி செய்யப்பட்டு 2012 மார்ச் 15 ஆம் திகதி சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இங்கு கூரைத் தகரம் போடப்பட்டு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அவை உரிய நியமங்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்காமையால் அந்த தகரத்தில் இருந்து நீர் அறைக்குள் நிறைந்து கடைகள் பயன்படுத்த முடியாத நிலையில் அதனது கூரையை மீண்டும் திருத்தி அமைக்கும் குறிக்கோளுடன் 2016 ஆகஸ்ட் 31 திகதி வரை முற்றாக அகற்றப்பட்டிருந்தது.

(ஆ) கூரை நிர்மாணிக்கப்பட்டு 04 வருடங்கள் அளவான குறுகிய காலப் பகுதியில் மீண்டும் திருத்தி அமைப்பதற்காக ரூபா 242,907 இற்கான மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டிருந்தது. முறையான மேற்பார்வையின்றி நிர்மாண வேலை மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் மேலும் மேற்கொள்வதற்கு நேரிட்டுள்ள செலவுக்ள மேலதிகச் செலவு ஒன்றாகியுள்ளது.

### 3.3.4 செயற்திட்டங்களை தாமதம் செய்தல்

பிரதேச சபையினை வலுப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மதவாச்சி கிராமத்தில் பிரதேச சபையின் கடைகளை திருத்துவதற்கான கட்டம் I கட்டம் II என முறையே ரூபா 498,422 தொகை மற்றும் ரூபா 302,868 தொகைக்கான இரண்டு உடன்படிக்கைகள் 2015 நவம்பர் 12 திகதி சபையினால் சனசமூக சபையுடன் கையொப்பமிடப்பட்டிருந்த போதிலும் 2016 ஆகஸ்ட் 31 திகதி வரை இந்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 சுற்றாடர் அனுமதிப்பத்திரம்

1988 இன் 56 ஆம் இலக்கம் மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல்சார் சட்டத்தின் 23 "அ" ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய சபையின் அதிகாரப் பிரதேசத்தில் செயற்படும் தச்சு தொழில், நெல் ஆலைகள் மற்றும் கற்கள் வேலைத்தளங்கள் ஆகிய தொழிகள் பற்றிய முறையான கணிப்பீட்டின் மூலம் இனங்காணப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதே போல் சபையின் மூலம் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய தொழில்களுக்கு அவ் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படாமல் வர்த்தக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான உள்ளவாறான செலவுகள் மற்றும் பாதீட்டு ஏற்பாடுகள் 18 சதவீதம் முதல் 73 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. அதன் பிரகாரம் வருடாந்த பாதீடு முறையான நிதிக்கட்டுப்பாட்டு கருவி ஒன்றாகப் பயன்படுத்தியிருக்கவில்லை.

### 4.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

2015 ஆண்டிற்கான பிரதேச சபைகளை வலுப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சபையின் டிரக்டர் வண்டிக்கு வெள்ளை இரும்பு நீர்தொட்டிகள் 02 க்கு ரூபா 1,000,000 தொகை பெறுமதிக்கு கொள்வனவு செய்திருந்ததுடன் 2016 ஆகஸ்ட் 31 திகதி வரையும் விளைவற்றுக் காணப்பட்டது.

**(ஆ) பண்டக் கணிப்பீடு**

2015 ஆண்டிற்கான 2016 மார்ச் 05 திகதி நடத்தப்பட்ட பண்டக் கணிப்பீட்டு சபையின் அறிக்கையின் பிரகாரம் சபையின் மூலம் இனங்காணப்பட்ட பழுதுபார்க்கப்பட வேண்டிய, விற்பனை செய்யப்பட வேண்டிய மற்றும் அழிக்கப்பட வேண்டிய பண்டங்கள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த விதப்புரைகள் செயற்படுத்துவதற்கு 2016 ஆகஸ்ட் 31 திகதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி**

2015 திசெம்பர் 31 திகதியில் சபையில் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப் பட்ட பதவியணி | உள்ளவாறான பதவியணி | வெற்றிடம் |
|---|---|---|---|
| நிறைவேற்று நிலை | 01 | - | 01 |
| இரண்டாம் நிலை | 15 | 09 | 06 |
| மூன்றாம் நிலை | 16 | 16 | - |
| மொத்தம் | 32 | 25 | 07 |

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1996 ஆண்டு முதல் வெற்றிடமாக காணப்பட்ட பிரதேச சபையின் செயலாளர் பதவியின் கடமைகளை பதில் கடமை அடிப்படையில்

செய்யப்படுகின்றதுடன் 2016 ஆகஸ்ட் 31 திகதி வரை வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், இயந்திர இயக்குனர் மற்றும் வேலை பரிசோதனைகள் பதவிகளில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட அவதானம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் | கவனம் செலுத்த வேண்டிய பரப்புகள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) சொத்துக்கள் கணக்கீடு செய்தல்<br>(ii) வருமானக் கணக்கீடு பதிவு செய்தல் |
| (ஆ) | வருமான நிருவாகம் | நிலுவை வருமானம் அறவீடு செய்தல் |
| (இ) | ஒப்பந்த நிருவாகம் | (i) ஒப்பந்தங்கள் மதிப்பீடு செய்தல்<br>(ii) ஒப்பந்த வேலைகளை தாமதமின்றி பூர்த்தி செய்தல்.<br>(iii) கைத்தொழில் சான்றிதழ் நிதிய வரி செலுத்துதல். |
| (ஈ) | மனித வள முகாமைத்துவம் | ஊழியர் வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல். |
| (உ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | சரியான முறையில் தயாரித்தல். |